என் தேவன்

தேவையை சந்திக்கிறார்

நீர் என் யெகோவா யீரே,
என் தேவையை சந்திக்கும் தேவன்.[1]
நான் அறிக்கை செய்கிறேன்:
எனக்கு ஒரு குறைவும் இல்லை.[2]
உம்முடைய கிருபை எனக்கு போதும்.3

நான் கவலைப்படுவதில்லை.
ஏனென்றால், என் தகப்பனாகிய நீர் என்னை
விசாரிக்கிறீர்.[4] என் தேவைகளை அறிந்திருக்கிறீர்.
நான் கூப்பிடும் முன்னே, பதிலளிப்பீர்.[5]

என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை
அறிந்திருக்கிறேன், அவர் ஐசுவரியம் உள்ளவராய்
இருந்தும், எங்கள் நிமித்தம் தரித்திரர் ஆனார்,
அவருடைய தரித்திரத்தினாலே, நாங்கள்
ஐசுவரியவான்கள் ஆகும்படி அப்படி செய்தார்.[6]

என் தேவன், கிறிஸ்து இயேசுவுக்குள், தம்முடைய
மகிமையின் ஐசுவரியத்தின்படி என் தேவைகளை
எல்லாம் சந்திப்பார்.[7]

உமது நாமத்தை அறிந்தவர்கள்
உம்மை நம்பியிருப்பார்கள், உம்மைத்
தேடுகிறவர்களை நீர் ஒருபோதும்
கைவிடுகிறதில்லை.[8]

என் தேவைகளை சந்திக்கும் தேவன் நீர்.

[1] ஆதி. 22:14
[2] சங். 23:1
[3] 2 கொரி. 12:9
[4] மத். 6:25
1 பேதுரு. 5:7
[5] ஏசா. 65:24
[6] 2 கொரி. 8:9
[7] பிலி. 4:19
[8] சங். 9:10

ஆதியாகமம் 22:14
ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது.

2 கொரிந்தியர் 12:9
அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

மத்தேயு 6:25
ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

1 பேதுரு 5:7
அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

ஏசாயா 65:24
...அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.

2 கொரிந்தியர் 8:9
நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே.

பிலிப்பியர் 4:19
என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

சங்கீதம் 9:10
கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au